# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை -09 26-11-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 280



S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
077-6059672




# சுதந்திரக்கட்சி–ஜே.வி.பி கூட்டணிக்கான இறுதி ஆவணத்திற்கு சு.க.அங்கீகாரம்

## சந்திரிகா நியமித்த குழு வழங்கியது

(கொழும்பு)

**சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜனதாவிமுக்தி பொரமுனவிற்கும் இடையிலான கூட்டணி சம்பந்தமான இறுதி ஆவணத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உத்தியோகத்தர்கள் குழு ஏகமனதாக அங்கீகரித்துள்ளது. இந்தக் குழுவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கீகாரத்துடன் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் நியமித்திருந்தார்.**

சிறிலங்கா சுதந்திரகட்சி மத்திய குழு ஜே.வி.பி.யுடன்கூட்டணிஅமைப்பதற்கு கொள்கை அளவில் ஏகோபித்த தீர்மானத்தை இரண்டு நாட்களுக்கு முன்னர் எடுத்திருந்தது.

இந்நிலையில் சனாதிபதி தலைமையில் நேற்று இடம் பெற்ற கூட்டத்தில் இறுதி ஆவணத்தை குழு அங்கீகரித்துள்ளது.

இதேவேளை சுதந்திரக்கட்சியுடன் கூட்டணி அமைப்பதன் மூலம் நாடு புதிய பாதையில் இட்டுச்செல்லப்படும் என்று ஜே.வி.பி.கூறியுள்ளது நேற்று பிற்பகல் கொழும்பில் விகாரமாதேவி பூங்காவில் நடை பெற்ற கலந்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மழையிருட்டில் முகாம் வேலியுடன் மோதினர் உந்துருளியில் சென்ற இருவர் கைது

இராணுவ முகாமினுள் அத்துமீறிப் பிரவேசித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இரு இளைஞர்கள் மீசாலைப் பகுதியில் வைத்துப்பிடிக்கப் பட்டுள்ளனர்.

கண்டிவீதியின் புத்தூர் சந்திப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமினுள் கடந்த சனிக்கிழமை இரவு வேளையில் அத்துமீறிப் பிரவேசித்ததாகக் கூறி அங்கு நிலை கொண்டுள்ள படையினரால் இவர்கள் பிடிக்கப்பட்டுள்ளனர்.

கல்வயல் பகுதியைச் சேர்ந்த இவ் இரு இளைஞர்களும் கொடிகாமம் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் சாவகச்சேரிப் பகுதியை நோக்கி சென்றுள்ளனர். அவ்வேளையில் மழை காரணமாகத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வெல்லாவெளியில் சிறுவன் மிதிவெடியில் சிக்கிப் பலி

(மட்டக்களப்பு)

வெல்லாவெளிப் பிரதேசத்தில் இடம் பெற்ற மிதிவெடி விபத்து சம்பவம் ஒன்றில் ஐந்து வயதுச் சிறுவன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் இவனது சகோதரன் படுகாயமடைந்து மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

## திருமலையில் இரு குண்டு வீச்சுக்கள் மூன்று பேர் பலி; ஐவர் படுகாயம்!

(திருகோணமலை)

கிண்ணியாப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இரு குண்டு வீச்சுச் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டதோடு, ஐவர் காயமடைந்துள்ளனர்.

தம்புள்ளவிலிருந்து கிண்ணியாவிற்கு மரக்கறி ஏற்றிச் சென்ற லொறி மீது நேற்று அதிகாலை கச்சக்கொடித்தீவுப் பகுதியில் வைத்து கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதன் விளைவாக இருவர் உயிரிழந்துள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில்கிண்ணியா வாசியான

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை மாணவர் மீதான தாக்குதல் குறித்து விசாரணை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக் கட்டடத்தினுள் வைத்து இரு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சிறிலங்காப் பொலிசாரால் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் சர்வதேச தமிழீழ மாணவர்பேரவைக்கட்டடத்துள்அத்துமீறிநுழைந்த சாதாரண உடைதரித்த பொலிசார்அங்குதங்கியிருந்த மாணவர்கள் இருவரைக் கடுமையாகத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மீன் கொண்டுசெல்லும் கொள்கலனிலிருந்து 25 இளைஞர்கள் நீர்கொழும்பில் கைது

### -இத்தாலீ செல்ல முயன்றவர்கள் ஆபத்தான நிலையில் மீட்பு

சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்வதற்காக மீன்களைக் கொண்டு செல்லும் குளிரூட்டி கொள்கலன் ஒன்றினுள் ஒளித்த நிலையில் அழைத்துச் செல்லப்பட்ட 25 இளைஞர்கள் நீர்கொழும்புப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம் பெற்றுள்ளது. இவர்கள் நீர் கொழும்புக் கடலின் ஊடாக இத்தாலிக்குச் செல்ல ஏற்பாடாகியிருந்தது. இவர்கள் மேலும் ஒரு மணித்தியாலம் இந்தக் குளிரூட்டியில் இருந்திருந்தால், அவர்கள் அனைவரும் மரணித்திருக்கக்கூடும் என நீர் கொழும்பு பொலிசார் தெரிவித்துள்ளனர். நீர்கொழும்பின் வெள்ளப்புவ, நயினாமடு போன்ற பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் இத்தாலி செல்வதற்காக வர்த்தகர்கள் இருவரிடம் முற்பணமாக தலா 75ஆயிரம் ரூபாவை கொடுத்திருந் ததாகவும், இத்தாலி சென்றவுடன் மேலும் 3லட்சம் ரூபாவை வர்த்தகர்களிடம் கொடுப்பது எனவும் இணங்கப்பட்டிருந்ததாகப்பொலிசார் கூறியுள்ளனர்.

## தமிழீழ மாவீரர் எழுச்சிநாட்கள் இன்று உணர்வுபூர்வ ஆரம்பம்

தமிழீழ மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வுகள் இன்றுகாலை 8மணிக்கு தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகின்றன. இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதற்காக மாவீரர்துயிலும் இல்லங்கள் அனைத்தும் கடந்த சில வாரங்களாக சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளதுடன் •வீதிகள் பொது இடங்கள் என்பனவும் துப்புரவு செய்யப் பட்டு சிவப்பு மஞ்சல் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

முக்கிய சந்திகள் கேந்திர நிலையங்களில் மாவீரர் நினைவு வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் மாவீரர் தினத்துக்கு அறைகூவல் விடுக்கும் பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன. அத்துடன் பந்தல்கள் அமைக்கப்பட்டு அலங்கரிக் கப்பட்டு மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

முக்கிய சந்திகளில் ஒலி பெருக்கிகள் பொருத்தப்பட்டு மாவீரரின் புகழ் கூறும் பாடல்களும் எழுச்சிப் பாடல்களும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

இன்று காலை 8மணிக்கு மாவீரர் துயிலுமில்லங்கள், பொதுநிறுவ

(8ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் துப்பாக்கிச்சூடு குறித்து கண்காணிப்புக் குழு விசாரணை

யாழ் பரமேஸ்வராச் சந்திப்பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி சந்திப் பகுதியில் சர்வதேச தமிழீழ மாணவப் பேரவை உறுப்பினர்களால் கடந்த 22ஆம் திகதி மாவீரர் தின வீதிவளைவு ஒன்று அமைக்கப்பட்டபோது அதனைப்படையினர் தம் றக் வண்டியால் இடித்து வீழ்த்தியதுடன் அங்கு நின்றிருந்த பல்கலைக்கழக மாணவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகமும் செய்துள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும் சம காலத்தில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் வன்முறைகளை தூண்டும் விதமாக அமைவதனால் கண்காணிப்புக் குழுவினர் இது சம்பந்தமாகப் படையினரிடம் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (33)

## மாவீரர் நாள் நவம்பர்-27

**மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு, சாதாரண மரண நிகழ்வு அல்ல; எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் திகழ்கிறது.**

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்அவர்கள்.

## வீரவணக்கம்

யாழ். வலிகாமம் கோட்டத்தில் கடந்த 20.11.2003 அன்று மின்சாரம் தாக்கி நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நாகன் பிரதீபன் (நாவற்காடு வாணி, யாழ்ப்பாணம் த.மு. உதய நகர்கிழக்கு கிளிநொச்சி)என்பவரே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

தமிழீழ போக்குவரவுக்கழக காவலர் பணிக்கான

## விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமைகள் உடைய ஆண் பாலோர் காவலர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்பு மாறு வேண்டுகின்றோம்.

**தகைமை:-**

அ. கல்வித்தகைமை :- ஆண்டு - 10 கற்றிருத்தல்
ஆ. அகவை:- 30 தொடக்கம்45 வரை.
இ. உயரம் :- 05அடி 06 அங்குலம்.

**குறிப்பு:-**

அ. விண்ணப்ப முடிவு நாள் :- 10-12-2003.
ஆ. அடிப்படை ஊதியம் :- 2000 - 2800 + 2000
10 X80

4000/=

இ. விண்ணப்பதாரருக்கான நேர்முகத்தேர்வு :-14-12-2003 , ஆம் நாள் பாண்டியன் வாணிபம், கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி யில் நடைபெறும்.

ஈ. நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.

உ. விண்ணப்பப் படிவங்களை புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, ஆகிய இடங்களிலுள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு.

(சி-8918)



## சாவு அறிவித்தல்

பிறப்பு 31 • 10 • 1958



இறப்பு 23 • 11 • 2003

### நிக்கிளாஸ் பாக்கியநாதன் (மாஸ்ரர்)

பெரியகோமரங்குளம், வவுனியா

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(3737)

த.மு.
அளம்பில்,
முல்லைத்தீவு.

பணிப்பாளர்,
அலுவலர்கள், மனித வளஅலுவலகம்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
தமிழீழம்.



முல்லைத்தீவு — புளியங்குளம் தமிழீழப் போக்கு வரவுக் கழக

## பயணியர் பேருந்துப் பணி நேர மாற்றம்

மேற்படிபணி 01.12.2003ஆம் நாள் தொடங்கி பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

### முல்லைத்தீவு - புளியங்குளம்

| முல்லைத்தீவு | செம்மலை | குமுழமுனை | முள்ளியவளை | ஒட்டுசுட்டான் | நெடுங்கேணி | புளியங்குளம் |
|---|---|---|---|---|---|---|
| காலை 04.30 | 05.30 | 05.50 | 06.35 | 07.35 | 08.20 | 09.05 |

### புளியங்குளம் - முல்லைத்தீவு

| புளியங்குளம் | நெடுங்கேணி | ஒட்டுசுட்டான் | முள்ளியவளை | குமுழமுனை | செம்மலை | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|
| பகல்12.00 | 12.45 | 01.30 | 02.30 | 03.15 | 03.35 | 04.35 |

முகாமையாளர்,
முல்லைத்தீவு,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி-8919)


# வெள்ளைப்பட்டி தினம்

## (நவம்பர் 25 சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம் தொடக்கம் டிசம்பர் 10 வரை-சர்வதேச மனித உரிமைகள் தினம்)

வுமன்கைண்ட் அமைப்பானது பெண்களின் மனித உரிமைகள் மற்றும் அவர்களது அபிவிருத்தி தொடர்பாக பங்காளி நிறுவனங்களுடன் இணைந்து உலகளாவிய ரீதியாக பெண்களின் பொருளாதார, சமூக அரசியல் தொடர்பான நிலையான முன்னேற்றத்தை அடைவதற்காக வேலை செய்யும் ஓர் அமைப்பாகும்.

வுமன்கைண்ட் 1998 நவம்பர் 25 சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினத்தை நினைவு கூரும் முகமாக முதன் வெள்ளைப்பட்டி தினத்தைத் இங்கிலாந்திலே அனுஷ்டித்தது. இத்தினத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகளாக அன்றைய தினத்தினை தொடர்ந்து 16நாட்களாக உலகளாவிய ரீதியாக கனடா,ஐரோப்பா,மத்திய மற்றும் தென்னமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் தேசிய ரீதியில் பிரச்சாரமும் ஏனைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. (நவம்பர்-25தொடக்கம் டிசம்பர் 10வரை சர்வதேச மனிதவுரிமைகள் தினம்)

வெள்ளைப்பட்டியானது பெண்கள் வன்முறைகள் தொடர்பான பீதிமற்றும் அனுபவங்கள் என்பவற்றில் இருந்து சுதந்திரமாக வாழமுடியும் என்ற நம்பிக்கையை குறிக்கும் ஒரு குறியீடாகும். வெள்ளைப்பட்டியினை அணிவதன் மூலம் ஆண்களுடன்இணைந்துசெயற்பட்டு வன்முறைகளை ஏற்றுக்கொள்வதற்கு சவால் விடுத்துமௌனம் சாதிப்பதனை தவிர்த்து உன்னதமான ஓர் உலகினை உருவாக்க தூண்டுகின்றது.

இங்கிலாந்தில் 2001ஆம் ஆண்டுக்கான வெள்ளைப்பட்டி தினத்தின் தலைப்பு வன்முறையின் செலவு வரிசெலுத்துபவர்களினதும் அரசினதும் பெண்களுக்கு எதிரான வன்முறையின் செலவானது மிகவும் பெரிது. இருப்பினும் வன்முறையின் செலவானது பண ரீதியான செலவினைவிட இன்னும் மேலான பலவற்றைக் கொண்டுள்ளது. உணர்வு, பௌதீக, பொருளாதார,குடியியல்

**வெண்பட்டி தினத்தை முன்னிட்டு பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள பிரசுரத்தை இங்கு தருகிறோம்.**

மற்றும் பால்நிலை தொடர்பான செலவீனங்கள் எங்களை பலவழிகளிலும் பாதிக்கின்றன. இத்தினத்தின் நோக்கமானது. இத்தகைய வன்முறையின் செலவினை ஆராய்வதுடன் அவற்றினை மறைந்துள்ள மற்றும் திட்டவட்டமாக தொகை ரீதியாக நோக்குவதுமாகும். இவ்வறிக்கையானது இத்தகைய பிரச்சினைகளை கையாளும் ஆண்,பெண்கள் நிறுவனங்கள் மற்றும் அரச அமைப்புக்கள் போன்றோரின் பல்வேறு பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் செலவீனத்தையும் ஆராய்ந்து வெளிப்படுத்தும்

2001க்கான வெள்ளைப்பட்டிதினத்தின் செயற்பாடுகளாக இந்தியா, நிக்காறுவா மற்றும் சூடான்நாட்டிலிருந்து வுமன்கைண்ட் நிறுவனத்தின் பங்காளர்கள் வன்முறையின் செலவுக்கான கருத்தரங்கிற்கான எடின்பரோவில் கூறினார்கள். இம்மாநாடு இங்கிலாந்தில் இடம்பெற்றுள்ளதுடன் இதில் 130பேர் பங்கு பற்றினார். இதில் பலவிடயங்களும் ஆராயப்பட்டன.

இவ்வறிக்கையானது இங்கிலாந்தில் நடைபெற்ற அம்மாநாட்டின் பிரதான நடவடிக்கைகள் மற்றும் பங்காளர்களின் பங்களிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இதுபெண்கள் அனுபவித்து வரும் வன்முறைகளின் பல்வேறு வடிவங்களை வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளது. அத்துடன் இவ்வறிக்கை சேவைகள் வழங்கல்தொடர்பாக பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாக நாம் விளங்கிக் கொண்டவற்றிற்கும் யதார்த்தற்திற்கு இடையிலான இடைவெளியினை அடையாளம்காண உதவியதுடன் இவ்வறிக்கை ஆய்வுக்கான பலபகுதிகளை அடையாளம் கண்டதுடன் பிரச்சினைகளை அனுவதற்கான பலதந்திரோபாயங்களை சிபாரிசு செய்துள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறையானது பல மில்லியன் பெண்களின் வாழ்க்கையைப் பாதிக்கின்ற ஓர்உலகளாவிய ரீதியான பிரச்சினையாகும். வெள்ளைப்பட்டிப் பிரச்சாரமானது இத்தகைய பிரச்சினைகளை வெளிக்கொண்டுவந்து பொதுமக்கிடையேயும் கொள்கைகள் வகுப்போரிடையேயும் கவனத்தை ஈர்க்க வேண்டிய பொறுப்பினையும் அதற்கான சந்தர்ப்பத்தையும் கொண்டுள்ளது. சில சிபாரிசுகள் நடைமுறைப்படுத்துவதுடன் அதில் முன்னேற்றமும் ஏற்படும். வெள்ளைப்பட்டி தினம் வருடாந்த ரீதியாக முன்னேற்றத்தை அளவிடக்கூடிய ஓர் வாய்ப்பை வழங்கியுள்ளது. நாம் தொடர்ந்தும்பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக உழைப்போம்.

(சி-8616)



இஸ்லாமாபாத்திலுள்ள ஆப்கான் அகதிமுகாமில் வசிக்கும் பர்தா அணிந்த ஆப்கான் பெண் ஒருவர் தனது குழந்தையை அழைத்துக்கொண்டு வீதியைக்கடந்து தனது முகாம் பகுதிக்குச் செல்கிறார்.

# பல்கலை மாணவர் விடுதியில் தீ விபத்து

# 28 மாணவர் பலி; 78 பேர் காயம்!

## மொஸ்கோவில் நேற்று அனர்த்தம்


(மொஸ்கோ)

**ரஷ்ய தலைநகரில் நேற்று இடம்பெற்ற பாரிய தீ விபத்தொன்றில் 28 பல்கலைக்கழக மாணவர்கள் உடல் கருகிப் பலியாகினர். மேலும் 78பேர் காயமடைந்தனர்.**

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது மொஸ்கோவில் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கும் விடுதியில் காலைவேளை திடீரெனத் தீ விபத்து ஏற் பட்டது. இவ்வேளை விடுதியி லிருந்த நூற்றுக்கும் மேலான மாணவர்கள் இவ்விபத்தில் சிக் கிக்கொண்டனர். பலியான 28 மாணவர்களும் ரஷ்யர் அல்லாத வெளிநாட்டு மாணவர்களாவர்.

ஐந்து மாடிகளைக் கொண்ட மேற்படி விடுதியில் இரு நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கியிருந்தனர். இந்தத் தீ மூன்று மணிநேரத்தின் பின்னரே அணைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

மாணவர் விடுதியில் ஏற்பட்ட பாரிய தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவராத நிலையில் அது குறித்துவிசாரணைகளைப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர். அத்தோடு விபத்துக்கு நாச வேலை காரணமாக இருக்கக் கூடுமோ என்பது குறித்து சந்தேகம் வெளியிடப் பட்டுள்ளது.



நுணுக்குக்காட்டியில் பெரிதாக்கப்பட்ட எபோலா வைரஸ் கிருமியின் தோற்றம். உலக சுகாதார ஸ்தாபன தகவலின் படி எபோலா வைரசின் பாதிப்பால் ஹொங்கோவில் பதினொரு பேர் மரணமாகியுள்ளதுடன் நூற்றுக்கும் மேலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# பிரான்சின் உயர்கல்வி சீர்திருத்தங்களுக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கடும் எதிர்ப்பு

(பாரிஸ்)

பிரான்சில் உயர் கல்வி சம்பந்தமான சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

பிரான்சின் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் அண்மையில் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனால் புதிய கல்விக் கட்டணங்கள் அதிகரிக்கலாம் என்றும் கல்வியின் தரம் மோசமாகப் பாதிக்கப்படும் என்றும் பல்கலைக்கழக மாணவர்கள் கருத்துக் கூறுகின்றார்கள்.

இதனையடுத்து அரசு உயர் கல்வி சீர்திருத்தத்தை ரத்துச் செய்யப்படும் வரை வகுப்புக்களை ரத்துச் செய்யவுள்ளதாகக் கூறி பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

பிரான்சில் 17 பல்கலைக்கழகங்கள் இந்தப் பகிஷ்கரிப்பு நடவடிக்கையினால் பாதிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் காபூலில் ஒருவர் பலி: நால்வர் காயம்!

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் காபூல் நகரில் அமைந்துள்ள வெளிவிவகார அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள மீது ஆப்கானிஸ்தான் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப் பட்டுள்ளார். 04பேர் காயமடைந் துள்ளார்கள்.

ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் வெளிவிவகார அலுவலகத்தை உடைத்து புகுந்து கொள்ள எத்தனித்தனர். இதன்போதே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாக ஆப்கானிஸ்தான் படைத்தரப்பு கூறியுள்ளது.

ஆப்கானிஸ்தான் படைத்தரப்பிலிருந்து நீக்கப்பட்ட முஜாகிதின் அமைப்பைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது.

## வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

பாபர் மசூதி வழக்கில் தொடர்புடையவர்களான துணைப் பிரதமர் அத்வானி, மனித மேம்பாட்டுத்துறை மத்திய அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி உட்பட 07 பேர் மீதான வழக்கின் விசாரணையை அடுத்த ஆண்டு சனவரி ஒன்பதாம் திகதிக்கு அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் லக்னோ பிரிவு பிற்போட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் மறு ஆய்வு மனுக்களைச் சமர்ப்பித்துள்ளமையினால் தான் வழக்கு விசாரணை பிற்போடப் பட்டுள்ளது.

# அரசியல் நெருக்கடி தணிய ரஷ்யா தீவிர நடவடிக்கை

ஜோர்ஜியாவின் அரசியல் நெருக்கடிகள் அதிகரித்து வருவதால் அதனை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யா முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஜோர்ஜியாவில் கடந்த இரண்டாம் திகதி நடைபெற்ற தேர்தலில் முறைகேடுகள் இடம் பெற்றதாகக் கூறி எதிர்க்கட்சிகள் எதிர்ப்புப் போராட்டம் நடத்திவந்தன. இதனையடுத்து எதிர்க்கட்சிகள் கடந்த 22ஆம் திகதி நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டிருந்தன.

இதனால் ஜோர்ஜியாவில் அரசியல் நெருக்கடிகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனை முடிவுக்குக் கொண்டு வருவதற்கே ரஷ்யா முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சர் இக்கோ இகானோ இருதரப்பினர்களுடனும் பேச்சு வார்த்தைகளை நடாத்தி வருகின்றார்.



காஸாப் பகுதியிலுள்ள ரபா அகதி முகாமில் இஸ்ரேலிய படையினருக்கும் பலஸ்தீன துப்பாக்கிதாரிகளுக்கும் இடையிலான மோதலொன்றின் போது முகமூடி அணிந்த பலஸ்தீன துப்பாக்கிதாரி கதவருகே நிலையெடுக்கிறார்.

# யுத்தநிறுத்தப் பேச்சுக்களில் பங்கேற்க பலஸ்தீனக் குழுக்கள் இணக்கம்

எகிப்தின் மத்தியஸ்தத்தில் அடுத்த மாத ஆரம்பத்தில் ஹெய்ரோவில் நடைபெறவுள்ள யுத்த நிறுத்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ள பலஸ்தீன குழுக்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

பலஸ்தீனக் குழுக்கள், எகிப்திய பிரதிநிதிகள், பதாஹ் நிர்வாகிகள் ஆகியோருக்கிடையில் இரு தினங்களாக நடந்த பேச்சுவார்த்தையின்போது இக்குழுக்கள் தமது இணக்கத்தைத் தெரிவித்துள்ளன. காஸா பேச்சுக்களில் கலந்துகொண்ட ஹமாஸ், இஸ்லாமிய ஜிஹாத் மற்றும் அரபாத்தின் அல்-பதாஹ் பிரதிநிதிகள் எகிப்திய தலைநகரில் நடைபெறவுள்ள யுத்த நிறுத்தப் பேச்சுக்களில் கலந்து கொள்ளப்போவதாகத் தெரிவித்துள்ளன.

# தமிழக முதல்வர் விடுவிப்பிற்கு எதிரான மேன்முறையீடு உச்சநீதிமன்றால் தள்ளுபடி

## ஏனைய வழக்குகளை இது பாதிக்காது

(சென்னை)

டான்ஸி நிலபேர ஊழல் வழக்கில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை விடுதலை செய்து சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட மேன்முறையீட்டு மனுக்களை விசாரணை செய்த உச்சநீதிமன்றம் நேற்று அதனைத் தள்ளுபடி செய்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு ஜெயலலிதாவிற்கு ஒரு இடைக்கால தளர்வாகவும், எதிர்த்தரப்பிற்கு மிகப்பெரிய அடியாகவும் நோக்கப்படுகின்றது.

செல்வி ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டாலும் உச்ச நீதிமன்றம் அவருக்கு எதிரான கண்டனங்களை வெளியிட்டுள்ளது.

அதே நேரம் ஜெயலலிதா மீது டானஸி வழக்கை விட வேறு வழக்கு விசாரணைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த வழக்கின் தீர்ப்பு ஏனைய வழக்குகளில் எந்தவித தாக்கத்தினையும் ஏற்படுத்தாது என ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார். அத்துடன் இந்த வழக்கை தி.மு.க. அரசு தக்கமுறையில் அப்போது கையளிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

## நடவடிக்கை நீடிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் ஆச்சே மாநிலத்தில் அவசரகால நிலைமையும் ஆச்சே தீவிரவாதிகளுக் கெதிரான படை நடவடிக்கைகளும் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப் பட்டுள்ளது.

அதே நேரம் ஆச்சே மாநிலத்திற்கான படைத்தரப்பின் கட்டளைத் தளபதி மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# கோபுறா மலைப் பகுதிகளில் இந்திய இராணுவம் தாக்குதல்

## -10 பாகிஸ்தான் படையினர் பலி

(புதுடில்லி)

காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் கோபுறா மலைப்பகுதிகளில் இந்திய இராணுவத்தினர் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியதில் 10 பாகிஸ்தானிய வீரர்கள் கொல்லப்பட்டதுடன் ஆயுத கிடங்கு, பதுங்குகுழிகள் என்பனவும் சேதமடைந்துள்ளதாக இந்திய இராணுவ வட்டாரம் கூறியுள்ளது.

பாகிஸ்தானிய வீரர்கள் கிராமப்புறங்களை நோக்கிச் சுட்டதில் 04 பொதுமக்கள் கொல்லப் பட்டுள்ளார்கள். இதனையடுத்தே இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தியதாகவும் இராணுவ வட்டாரம் கூறுகின்றது.

## -அஸாம், பீகார் மாநிலங்களில்-

# வன்முறைகள் அதிகரிப்பதையிட்டு குடியரசுத் தலைவர் கவலை

(புதுடில்லி)

அஸாம், பீகார் மாநிலங்களில் வன்முறை குறித்து இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கவலை தெரிவித்ததுடன், இதுதொடர்பாகப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

இதனைக் குடியரசு தலைவர் மாளிகையின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இப்பிரச்சினை தொடர்பாகப் பல மனுக்கள் குடியரசுத் தலைவருக்குக் கிடைத்துள்ளதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.





# ஏமாற்றத்தைக் கொடுத்த ஒருநாள் கிரிக்கெட்தொடர்



நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் சிறிலங்கா அணி எதிர் கொண்ட ஒருநாள் கிரிகெட் தொடர் பரபரப்பின்றி நிறைவடைந்துள்ளது.

இதில் ஒரு போட்டியைத் தவிர ஏனைய இரண்டு போட்டிகளும்



காலநிலை சீரின்மை காரணமாக முற்றாக கைவிடப்பட்டதே இந் நிலைக்குக் காரணமானது.

எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆரம்பமான முதலாவது ஒருநாள் போட்டியில் பத்து விக்கெட்டுக் களால் சிறிலங்கா அணி வெற்றி பெற மேற்படி போட்டித் தொடர் விறுவிறுப்பை எட்டும் என எதிர் பார்த்த நிலையில் ஏனைய போட்டி கள் நடைபெறாது போனமை விளையாட்டு ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளித்த அதே வேளை சிறிலங்கா தொடரையும் போட்டியின்றி தனதாக்கிக் கொண்டது.

இதனால் பெரும் ஏமாற்றத் துக்குள்ளான இங்கிலாந்து அணியும் அதன் ரசிகர்களும் டெஸ்ட் தொட ருக்காக காத்திருக்க வேண்டிய நிலை.

முதலாவது ஒருநாள் போட்டியில் இலகுவாக இங்கிலாந்து அணியை வீழ்த்திய சிறிலங்கா அணி ஏனைய போட்டிகளை எதிர் கொள்வதில் மனோதிடம் மேலோங்கியிருந்த நிலையில் ஏனைய போட்டிகள் கைவிடப்படும் நிலைக்குச் சென் றமை சிறிலங்கா அணியினருக்கும் அதன் ரசிகர்களுக்கும் ஒரு வகையில் ஏமாற்றமே.

அண்மைக்காலமாக டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் திறமையாக செயற்பட்டு வந்த இங்கிலாந்து அணி சிறிலங்காவுடனான முதலாவது ஒரு நாள் போட்டியில் 88 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து மோசமான தோல்வியைச் சந்தித்தமை அதன் திறமையில் கேள்வியை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில் இரு அணிகளுக்கும் இடையில் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடர் முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கிலாந்து அணியைப் பொறுத்தவரையில் ஒருநாள் போட்டி களை விட டெஸ்ட் போட்டிகளை எதிர்கொள்வதில் திறமை வாய்ந்த வர்களாகக் காணப்படுகின்றனர்.

அதாவது அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற நான்கு டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடர் தென்னாபிரிக்க அணிக்கு சாதகமாக இருந்த போது அதனை சமநிலைப்படுத்தும் அளவுக்குத் திறமையாக விளையாடியமை, தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் இறுதிப் போட்டியில் வெற்றியீட்டி யமை பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டித் தொடர்களை முழுமை யாக தமதாக்கியமை போன்றவற் றைப் பார்க்கும் போது சிறிலங்கா அணியால் டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற முடியுமா? என்ற கேள்வியை எழுப்புகின்றது.

குறிப்பாக அணித் தலைவர் மைக்கல் வோகன், மார்கஸ் ட்ரஸ்கொதிக், நஸார்ஹுசைன், பிலின்டொப் ஆகிய வீரர்கள் மிகச் சிறப்பாக விளையாடி வருகின்றமை போட்டியில் எத்தகைய திருப்பத் தையும் ஏற்படுத்தலாம்.

சிறிலங்கா அணியைப் பொறுத்தவரையில் புதிய பயிற்சி யாளர் ஜோன் டைசனின் நெறிப் படுத்தலில் திறமையாகச் செயற் பட்டு வருவதை முதலாவது ஒரு நாள் போட்டி வெளிப்படுத் தியுள்ள நிலையில் இங்கிலாந்து அணிக்கு டெஸ்ட் தொடர் இலகு வானதாக இருக்கப் போவதில்லை என்ற கருத்து நிலவுகிறது.

எனினும் வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் ஆகியோரின் பந்து வீச்சை இங்கிலாந்து துடுப் பாட்ட வீரர்கள் எதிர்கொள்வது என்பது கடினமானதொன்றாகவே இருக் கும் என்பது பலரதும் கருத்து.

இந்நிலையில் இங்கிலாந்துட னான டெஸ்ட் தொடரைக் கைப்பற் றாத சிறிலங்கா அணிக்கு இயற்கை அன்னை கருணை காட்டுவாளா? அன்றேல் சிறிலங்கா அணியின் திறமை நிரூபிக்கப்படுமா?

□□□□□

# சச்சினால் மறக்க முடியாத ஆட்டநாயகன் விருது

கிரிக்கெட்டில் சச்சின் எத்தனையோ ஆட்ட நாயகன் விருது வாங்கி யிருப்பார். ஆனால் அவரால் மறக்க முடியாத "ஆட்டநாயகன்" விருது எதுவாக இருக்கும்?

ஷார் ஜாவில் வாங்கியதாக இருக்குமா, இல்லை உலகக் கிண் ணத்தொடரில் வாங்கி யதா? இப்படியெல்லாம் கஷ்டப்பட வேண்டாம். அண்மையில் நடைபெற்ற முக்கோணத் தொடரின் போது குவாலியரில் நடைபெற்ற அவுஸ்திரேலி யாவுக்கு எதிரான போட்டி யில் வாங்கிய சிறப் பாட்டக்காரர் விருது அது தான் அவரால் மறக்க



முடியாத தாம். அவரே சொல்கிறார். காரணம் இல்லாமல் இல்லை. அந்த ஆட்ட நாயகன் விருதுக்குப் பின்னணியில் பெரிய கதையே இருக்கிறது. குவாலியர் போட்டியில் அவுஸ்தி ரேலியாவை வெற்றிபெற்ற சந்தோசம் என்றால் ஆட்ட நாயகன் விருது சச்சினுக்குக் கிடைத்தது. அதைவிட சந்தோசம் என்றால் ஆட்ட நாயகன் விருதுக்காக 35 ஆயிரம் ரூபா காசோலை வாங்கிய பின் இந்திய அணி அவர்கள் தங்கியிருந்த நட்சத்திரக் ஹோட்டலுக்குச் சென்றது.

அங்கு தமது அணிக்காக ஒதுக்கப்பட்ட வீரர்கள் ஓய்வறையில் அனைவரும் மகிழ்ச்சியாக அன்றைய ஆட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். நீண்ட நேரம் பேசி முடிந்த பிறகு ஆளாளுக்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குக் கிளம்பிச் சென்றனர். அன்றைய போட்டியில் சதம் அடித்த களைப்போ என்னவோ, போகிற போக்கில் தனக்குப் பரிசாகக் கிடைத்த காசோலையை அங்கேயே தவறவிட்டுப் போய்விட்டார் சச்சின். வீரர்கள் இடத்தைக் காலிசெய்த பின்னர் ஹோட்டல் சுத்திகரிப்பாளர் அங்கு வந்து கதவைத்திறந்து அறையைச் சுத்தம் செய்துவிட்டுக் கதவை மூடப்போனவர் கண்களில் அது பட்டது. அறையின் ஓரமாக மேசை ஒன்றிற்குக்கீழ் மேன் ஆப்த மெட்ச் எனும் வாசகம் பொறிக் கப்பட்டிருந்த ஒரு பரிசுக் கவர். பார்த்ததும் தெரிந்துவிட்டது அது சச்சினுக்குக் கிடைத்த பரிசு என்று.

அதை எடுத்துக்கொண்ட அந்த சுத்திகரிப்பாளர் இரவு நேரத்திலும் சச்சின் தங்கியிருந்த 207 எண் அறைக்கு ஓடினார். பரிசைத் தொலைத்த விபரமே தெரியாது தூங்கிக்கொண்டிருந்த சச்சினின் கதவு தட்டப்படுவது கேட்டு வெளிவந் தார் சச்சின்.

ஆட்டநாயகன் கவர் சார்.... உங்க பரிசுக்கவர் ஓய்வறையில் கிடந்தது என்று சுத்திகரிப்பாளர் சச்சினிடம் கொடுக்க இந்த இரவு நேரத்திலும் அசந்துவிட்டார் சச்சின். கண்ணில் பட்டதும் அதைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்த அந்த ஹோட்டல் ஊழியரின் நேர்மை அவரை நெகிழச் செய்தது. கவரை வாங்கிய கையோடு அந்த ஊழியரின் நேர்மையைப் பாராட்டி பெரும் பணம் அன்பளிப்பாகக் கொடுத்தார்.

ஆனால், சச்சின் எவ்வளவு வற்புறுத்தியும் பணத்தை வாங்க மறுத்துவிட்டார் அவ் ஊழியர். அன்று இரவு தூக்கமே போய்விட்டது சத நாயக னுக்கு.

அடுத்தநாள் காலை எழுந்து ஹோட்டல் வரவேற்பறையில் இருந்த வாடிக்கையாளருக்கான கருத்துப் புத்தகத்தில் இந்தச் சம்பவம் பற்றி விரிவாக எழுதியதோடு அந்த ஊழியரின் நேர்மை பற்றியும் வெகுவாகப் பாராட்டியிருந்தார்.

இந்த சம்பவத்தை நான் நீண்ட நாள் மறக்க மாட்டேன் என்றும் சக வீரர்களிடம் சொல்லிப் புகழ்ந்தாராம் சச்சின்.

# கௌரவத்திற்குரிய வெற்றி

உலக ரக்பி கிண்ணத்தை இங்கிலாந்து அணி வெல்வதற்கு வழிசமைத்த அதன் துணைத் தலைவர் ஜொனி வில்கின்சன் 'சேர்' பட்டமளித்து கௌரவிக்கப்படவேண்டும் என இங்கிலாந்து பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. அதேவேளை இங்கிலாந்து மகாராணியும், பிரதமர் ரொனி பிளேயரும் தமது வாழ்த்துச் செய்திகளை அவருக்கு அனுப்பி வைத்துள்ளனர். அத்துடன் இவ்வெற்றியை தேசிய அளவில்



கொண்டாடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

ஜொனி வில்கின்சன் இறுதிப் போட்டியில் 15 புள்ளிகளைப் பெற்றார்.

ஏற்கனவே நடைபெற்ற நான்கு உலகக் கிண்ண ரக்பி போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி இரு தடவையும், நியூசிலாந்து, தென்னாபிரிக்க அணிகள் தலா ஒரு தடவையும் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தன.

இந்நிலையில் மூன்றாவது தடவை சம்பியனாகி சாதனை படைப்பதற்கு அவுஸ்திரேலியா திட்டமிட்டிருந்தது. எனினும் மார்ட்டின் ஜோன்சன் தலைமையிலான இங்கிலாந்து அணி ஜோர்ஜ்கிரகன் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியின் கனவைக் கலைத்தது.

அவுஸ்திரேலியாவின் சிட்னி ஒலிம்பிக் மைதானத்தில் நடைபெற்ற விறுவிறுப்பான இறுதியாட்டத்தில் இவ் வெற்றி இங்கிலாந்து வசமானது.

இங்கிலாந்து அணியின் வெற்றி குறித்து அதன் தலைவர் மார்ட்டின் ஜோன்சன் தெரிவிக்கையில்,


இறுதிப் போட்டியின் ஆரம்பத்தில் நாம் முன்னணி வகித்தோம். பின்னர் அவுஸ்திரேலியா வெற்றி இலக்கை நோக்கி முன்னேறியது. இருந்தும் வில்கின்சனின் அயரா ஆட்டத்தால் நாம் வெற்றியீட்டினோம்.

இவ்வெற்றியின் மூலம் வட அரைக்கோள நாடுகளில் ரக்பி உலகக்கிண்ணத்தை வென்ற முதலாவது நாடு என்ற பெருமையை இங்கிலாந்து பெற்றது.

மேலதிக நேரத்தில் தவறவிடப்பட்ட கோலை அடித்ததன் மூலம் ஜொனி வில்கின்சன் இங்கிலாந்து அணியின் வெற்றி நாயகனானார்.

# தமிழீழ மாவீரர் எழுச்சிநாள்-2003

## கார்த்திகை 27 தனில்



மாண்டு போகவில்லை
மாவீரர் மாண்டு போகவில்லை.
தமிழர்கள் நெஞ்சமதில் இதயக்
கோயில்களாய்-வீற்றிருக்கிறார்கள்
உங்கள் கல்லறைதனில்-பூ மாலைகள்
புதிய வரலாறு படைக்க ச...த்துடன்
காற்றில் அசைகிறது.உங்கள் மேனியைத்
தழுவிய புலிக்கொடியே
தாகம் அடங்காது-சினத்துடன்
சீறுகிறது.
உங்கள் நினைவுகளை மீட்கையில்
கண்ணில் பெருககிறது-கண்ணீர்
மண்ணின் விடுதலைக்காய் எத்தனை
மாவீரர்களை மண்ணில் விதைத்தோம்.
அதற்கான அறுவடைக்காலம்
வரும் நாளை எண்ணிகாத்திருக்கிறோம்.

உறவுகள் கூடி
உங்களை மீட்டிடும் - நேரமது

தம்பி தங்கைகள் கல்லறை மீது
சபதம் எடுக்கும் காலமிது
தானைத் தலைவன் வழி
இணைந்து
தளராது களமாடி பகை வீழ்த்த
உற்ற தோழனோ உள மகிழ்ந்து
உங்களுடன் உறவாடும் - நேரமிது
உங்கள் வரவுக்காய்
ஒவ்வொருவரும் வழிமேல் விழி
வைத்து
தீப்பிழம்பினூடே
தேடுகிறார்கள்.எங்கே எங்கே
ஒருதரம் எம் அருகில்
எழுந்து வரமாட்டீரா என்று
கதறியழும் எம் உறவுகள்
அங்கே.

-நீர்வேலியூர்
வே.அகமொழி

## துதித்திடுவோம் அவர் நினைவை

பாரிலே வரலாறெழுதும்
புது மனிதர்கள்
எங்கள் மாவீரச் செல்வங்கள்
தமது வாழ்விழந்து
தமது உறவிழந்து
தமிழினத்திற்காய்
உயிர் ஈகம் செய்தார்கள்
சாகும் நேரம் வந்தது தெரிந்தும்
சிரித்துக்கொண்டே சென்றார்கள்.
துதித்திடுவோம் அவர் நினைவை
தமிழ் தேசமெங்கும் இன்நாளில்.

-சுமி

## தமிழுலகம் உள்ளவரை வரலாறு உமை நினைக்கும்

இளமை தரும் சுகம் அறவே களைந்து,
இலட்சியக் கனவினை விழிகளில் ஏந்தி,
மழையில் பனியில் வெளியில் உறங்கி
வாட்டும் குளிரினை மேனியில் தாங்கி
சாய்ந்ததால் வாழும் சரித்திர நாயகர்
தாள்களில் எந்தன் கவிதைகள் அடைக்கலம்.

விண்ணர்கள் குண்டினை விரும்பியே ஏற்றிடும்
வீரர்கள் தாள்களில் கவிதைகள் அடைக்கலம்.
விடுதலை என்னும் ஒளியினைக் காண
வீரர்கள் எத்தனை பேரை இழந்தோம்.
அத்தனை பேரையும் என் ஆசைக் கவிதைகள்
அணைத்தே நிற்கும்.
மாடி மனை கட்டிடவா
மாதர் சுகம் பெற்றிடவா
பட்டங்கள் பெற்றிங்கு
பதவியிலே நிலைத்திடவா
பட்டுக்கள் கட்டி ஊர்வலத்தில் நின்றிடவா
கொட்டியிங்கே செங்குருதி வீதியிலே பாய்ச்சுகின்றார்,
இல்லை; கெட்டுத் தெருவோரம் மரணித்த தமிழ்க்
குலத்தின் விடிவிற்காய் தம்முயிரை விருப்போடு
தந்துவிட்டார்.
கருவோடு சேர்ந்து வளர்த்த தமிழ்த்தாய்க்களிக்க
தெருவோரம் செங்குருதி சிந்தி அவர் சிரிக்கின்றார்.
பாய்ந்து வரும் பகைவர் தலை பறித்தெடுத்து நடுகை செய்த
வேங்கைகளும் எத்தனை பேர் வீழ்ந்தனர் இம்
மண்ணிடையே.
அன்னம் தண்ணீர் எதனையும் நாடா வண்ணம்
நித்தமும் களத்தினில் நின்றார்.
கவசம் பூட்டிய வாகனம் வந்தது
எங்கள் தெருவோரம்
அது களன்று ஆயிரம் துண்டாய்ப் போனது
வாய்க்கால் கரையோரம்.
நிமிர்ந்து இலட்சம் எச்சங்கள் போட்டது
ஆளும் பருந்துகளே.
அதை ஓட ஓட விரட்டி அடித்தது
எமது வீரரின் உருக்குக் குண்டுகளே.
கண்ணீரில் மிதக்கிறாள் தங்கை
கலியாணக் காட்சிக்கு வழியில்லை அங்கை.
உழைப்பதற்கு ஆரும் இல்லை வீட்டில்
போரினில் நிற்கிறான் தம்பி தன்னை
நாட்டிற்கே கொடுத்திட்டான் திடத்துடன் நம்பி.
காட்டிக் கொடுத்தவன் தலைவன் ஆவதா,
களத்திலே நின்றவன் தனியனாவதா,
பூட்டுப் போட்டவன் மேடையில் ஏறுவதா,
பூமியைக் காத்தவன் படிகளே ஆவதா,
இந்நிலை மாற எழுந்து நின்ற வேங்கைகளே,
எந்நிலை வந்திடினும் நெருங்காது உமை
மரணம்.
வாயாலே வீரத்தை உரைக்காத வீரர்களே
வயிற்றாலே மானத்தை விற்காத தீரர்களே
இறந்தாலும் வாழ்வீர்கள், தமிழ் உலகம்
உள்ளவரை உம்தியாகம், புனிதம்
வரலாற்றில் நிலைக்கும்,வரலாறு நினைக்கும்.

-ஏழுமலை மூவேந்தன்-

## கல்லறையை விட்டு...!



ஓ! மாவீரர்களே!
மலர்ந்த பூக்களே
நீங்கள்
உதிர்ந்து போனீர்களோ
உதயம் காணப் புறப்பட்டு -
உங்கள்
உதிரம் சிந்தினீர்களோ
இனிமை வாழ்வின் இன்ப
சுகங்களை-எமக்காய்
இனிதே துறந்தீர்களோ
அச்சமது இல்லையென்றெழுந்து-
பகையை
மிச்சமேதுமில்லாதாக்கியவரோ

வீரமுடன் தீரமுடன் போராடி,
வீரச்சாவணைத்தவரே
அண்ணன் வழியில் இணைந்து
-தமிழீழ
எண்ணம் சுமந்தவரே
உங்களுக்காய் வேகின்றன
எங்களது நெஞ்சங்கள்.
எழுந்து வருவீர்களா
கல்லறையை விட்டு
நிமிர்ந்து வருவீர்களா.
எங்கள் முகம் காண
உங்கள் முகம் காணத்
துடிக்கின்றோம்

-பொலிகையூர் வசந்தன்-

## கல்லறையில் துயில்கின்ற வீரர்கள்

விடியும் செய்தி கூறி
பூமியினைத் துயிலெழுப்பும்
பூங்குயிலும் காகங்களும்
கவலை தோய்ந்த குரலினிலே-இன்று
கதறுவதும் ஏனோ
வான் முகில்கள் காலையிலே
வாடிக் கண்ணீர் சிந்தும்
தன்மையிது கேட்பீரோ
தன் மக்கள் கல்லறையில்
மடிந்தமையால் ஈழத்தாயும்
மழையாகிக் கண்ணீர்தனைச்
சொரிந்து நினைவுகளை மீட்டிப் பார்க்கின்ற
நன்நாளும் இன்றல்லோ
பூபாளம் இசைக்கின்ற
பொழுதினிலே இங்கு
முகாரி ராகம் கேட்கிறதே-வீர
மறவர்களின் நினைவுகளை
இயற்கையும் மறந்துவிட
இயலாமல் துடிக்கின்ற நாளிதுவோ
அந்தோ அன்னையர்கள்
அழுது மலர்மாலை பல தாங்கி
காலையிலே
கல்லறையில் துயிலுகின்ற - தம்
வீரப் புதல்வர்களைக் காண
விரைந்து செல்லும் நாள் இதுவே
எண்ணிலா செயல் புரிந்து
ஏற்றமுறச் செய்திட்ட
வீரர்களின் ஈகங்களை-நினைத்து
விம்முகின்ற உறவுகளின்-
துடிதுடிக்கும் உணர்வுகளை
உலகத்தார் அறிவாரா?

பூ.நளாயினி

## “காலத்தால் அழியாத காவிய நாயகர்கள்”

**சி.ஜெயரூபி**

நவம்பர் 27 ஆம் திகதி தமிழ் மக்களின் மனங்களில் இருந்து மறக்கப்பட முடியாத புனிதமான நாள். அன்றைய தினம் கேளிக்கைகளைப் புறக்கணித்து, மக்கள் எல்லோரும் ஒருமித்து ஒரேஒரு நிகழ்வை மட்டும் நினைவு கூருவர். ஆம், அன்று தமிழீழ மாவீரர் நாளாகும்.

இம்மாவீரர்கள் விண்ணிலிருந்து வந்தவர்களோ, அல்லது வேறு நாட்டவரோ அல்ல, எமது தமிழீழ தேசத்தின் தமிழ்த்தாய் வயிற்றில் உதித்த தவப் புதல்வர்கள். இவர்கள் எம் இனத்தைப் பற்றிச் சிந்தித்தவர்கள். தமிழன் அடிபணிந்து, அடிமைப்பட்டு, தலை குனிந்து வாழ்வதைச் சகிக்கமாட்டாதவர்கள். குட்டக்குட்டக் குனிந்து, கைகட்டி வாய் பொத்தி அடிமையாக, எம் மூதாதையர் வாழ்ந்த நிலை காலம் காலமாக அடுத்த சந்ததிக்குப் பரவவிடாது தடுப்பதற்காகத் தளராத துணிவு கொண்ட தலைவன் சேனையில் இணைந்தவர்கள். எம் இனத்தின் விடுதலைக்காகப் பாசங்களைத் துறந்து, உறவினரை, ஊரைவிட்டு, எங்கோ ஓர் எல்லையில் எதிரியின் வருகைக்காகக் காத்திருந்தவர்கள். நாம் தூங்கியிருக்கையில் தேசத்தைக் காக்க விழித்திருந்தவர்கள். எதிரியுடன் போராடி விழுப்புண் அடைந்தவர்கள். வித்துடலாக வீழ்ந்தவர்கள்.

சிறுத்தையாக, பெண்புலியாக, கடற்புலியாக,கரும்புலியாக உருவெடுத்து எதிரிக்குச் சிம்மசொப்பனமாக விளங்கியவர்கள். இனத்தின் விடுதலையை இதயத்தில் சுமந்து,சாவிற்கு நேரம் குறித்து தலைவனுடன் உண்டு,உறவாடி மகிழ்ந்து காலனை வென்று சரித்திரமான தற்கொடையாளர்கள். எதிரியின் குகையில் எரிமலையாக வெடித்தவர்கள். எட்டுத் திக்கும் மாவீரர் புகழ் பாடிடும் வகையில் உடலை எரிமலையாக்கி வரலாற்றில் அழியாத காவியமானவர்கள். அகிலமே அதிசயித்திட அரும்பெரும் செயல்கள் செய்து விதையானாலும், மௌனத்தில் நினைக்கப்படுபவர்கள்.

ஈழப்போராட்டத்தின் வேகம்,ஈடில்லா வெற்றிகள், அளப்பெரும் தியாகங்கள், ஆற்றல் மிகு சாதனைகள் கண்டு தாமும் தாய்நாட்டிற்குப் பங்களிக்க வேண்டும் எனும் உத்வேகத்தால் குடும்ப சுமையைத் தோளில் சுமப்போர், உத்தியோகத்தர்கள், குடும்பப் பெண்கள்,முதியோர் எனப் பல தரப்பினரும் எல்லைப்படை,கிராமியப்படைகளில் இணைந்தனர். களங்களில் நின்றனர். மாவீரர்களாக, நாட்டுப் பற்றாளர்களாக மண்ணிற்கு வித்தாகினர்.

கொலை,களவு, குற்றச்செயல்களைத் தடுப்பதும், இவற்றிலிருந்து மக்களைக் காப்பது மட்டுமே தம் கடமை எனக் கருதாது காவல்துறையினர்களங்களில்நின்றனர். களப்பலியாகினர்.



ஈழப் போராட்ட ஆரம்பம் முதல் இன்றுவரை மாவீரர்களானவர்களின் சாதனைகள் ஈடு இணையற்றவை.

“மண்மீட்புப் போரில் மண்ணிற்கு வித்தான மண்ணின் மைந்தர்களை கௌரவிக்க வேண்டும். அவர்களின் அளப்பெரும் தியாகங்கள் ஒவ்வொரு ஆண்டும் மக்கள் மனங்களில் மீட்டப்பட வேண்டும். அனைத்து மாவீரரும் ஒருமித்து ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும்” இவ்வாறு எழுந்த தலைவரின் சிந்தனையின் வெளிப்பாடே நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாளாக நினைவுகூரப்படுகின்றது. முதலாவது மாவீரர் நாள் 1989 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி நினைவுகூரப்பட்டது. தலைவன் மடியில் தலை வைத்து உயிர்நீத்த முதலாவது மாவீரன் லெப்.சங்கரின் நினைவு நாள் நவம்பர் 27 ஆம் திகதி என்பதினாலேயே அத்தினத்தைத் தமிழீழ மாவீரர் நாளாகத் தேர்ந்தெடுத்தனர்.

தாயகக் கனவினை நெஞ்சினில் தாங்கி விண்ணடைந்த மாவீரர்களின் நினைவு நாளைச் சுமந்தபடி,நவம்பர் 27 ஆம் திகதி நாம் ஏற்றும் சுடர்களில் தெரிகின்ற மாவீரர்களின் முகங்களின் முன் “உங்கள் வழியில் தாயகத்தினை மீட்கப் போராடுவோம், சுதந்திர விடியல்வரை எமது சுவடுகள் ஓயாது” என சத்தியம் செய்து சுதந்திரத் தமிழீழம் கிடைப்பதற்கு எத்தகைய பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்துச் செயற்படுவோமாக.

# தமிழீழ மாவீரர் தினத்தையொட்டி திருமலையில் முச்சக்கரவண்டிப் பேரணி

தமிழீழ மாவீரர் தினத்தை ஒட்டி நேற்றுமுன்தினம் காலை திரு கோணமலை நகரில் முச்சக் கரவண்டிகள் (ஆட்டோ) பங்கு பற்றிய எழுச்சிப்பேரணி ஒன்று நடாத்தப்பட்டது. முன்னூறுக்கும் அதிகமான ஆட்டோக்கள் இப் பேரணியில் கலந்து கொண்டன. பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தர்மன் பேரணியை திருமலை உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவில் வைத்து தொடக்கிவைத்தார்.

பேரணியில் கலந்து கொள்வதற்காக ஆட்டோக்கள் காலை 7 மணியிலிருந்து மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெறும் இந்து கலாச்சார மண்டபத்தை வந்தடையத் தொடங்கின. வாகனப் பேரணி இருபிரிவுகளாக இடம் பெற்றன. ஆட்டோக்கள் ஒரு பிரிவு திருகோணமலை நகரிலிருந்து 13 மைல் தொலைவில் உள்ள தம்பலகமம் கிராமத்திற்குச் சென்று திரும்பியது. இன்னொரு வாகனப் பேரணி நிலாவெளி, கோபாலபுரம் பகுதியில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத் தூபி வரைசென்று திரும்பியது. தம்பலகமம் கோணேஸ்வராலயம் வரை சென்ற வாகன எழுச்சிப் பேரணிக்கு அங்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. போக்குவரத்து பொலிசார் வாகனப் பேரணி நடைபெறுவதற்கான வீதியொழுங்குகளை மேற்கொண்டிருந்தனர்.

பேரணியின் ஆரம்ப நிகழ்வில் பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் தர்மன், கும்புறுப்பிட்டி பொறுப்பாளர் சிவகுமார் ஆகியோர் உரையாற்றினர். தர்மன் தனது உரையில், இன்று நடைபெறுவது மாவீரர் தினத்தை ஒட்டிய எழுச்சிப் பேரணியே; ஆர்ப்பாட்டப் பேரணியல்ல என்று தெரிவித்தார். தமிழ்மக்கள் தங்களின் சொந்தத் தலைமைத்துவத்தின் கீழ் செயற்படும் நிலை உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். (25)



கிளி. இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திற்கு அண்மையாக வீதியோரம் மின் கம்பமொன்று சரிந்து மின் கம்பிகள் மரமொன்றில் முட்டியபடி உள்ளதைப் படத்தில் காண்க. கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாகக் காணப்படும் இந்நிலை இதுவரை சீர்செய்யப்படாமையால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்கின்றனர். (சோதி)

# தமக்கெதிரான தீர்மானத்தை எதிர்கொள்ளத் தயாராம்

## ஆனந்த சங்கரி கூறுகிறார்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு கூடும் வேளையில் அதில் தமக்கு எதிராகக் கொண்டு வரப்படும் எந்த ஒரு தீர்மானங்களையும் முறியடிக்கத் தயார் எனக் கட்சித் தலைவர் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 30ஆம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கொழும்பில் கூட இருக்கின்றது. இதில் பங்கேற்குமாறு வடக்கு-கிழக்கு மாவட்ட கிளைகளின் 36 அங்கத்தவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டக் கிளைகள் ஒன்றுகூடி கட்சியின் தலைவர் பதவியில் இருந்து வீ. ஆனந்த சங்கரி விலக வேண்டும் என தீர்மானம் மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில் மத்திய செயற்குழுவில் வீ. ஆனந்த சங்கரியைப் பதவி விலகக் கோரும் 25 பேர் அங்கம் வகிப்பதாகத் தகவல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. எனவே குறிப்பிட்ட தினத்தில் கூட்டணிக் கிளைகளின் தீர்மானங்கள் தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (32)

# மாவீரர்நாள் அலங்கரிப்பில் ஈடுபட்டிருந்தோரை வீடியோப்படம் பிடித்த படையினருடன் முறுகல்!

## கண்காணிப்புக் குழுவிற்கும் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் மாவீரர் நாள் அலங்கரிப்பு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோரைப் படையினர் வீடியோ படம் பிடித்ததால் அப்பகுதியில் இளைஞர்களுக்கும் படையினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

சாவகச்சேரி சந்திப்பகுதியில் மேற்படி செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளைஞர்களை அப்பகுதிப் படையினர் வீடியோப்படம் பிடிக்க முனைந்ததாலேயே இம் முறுகல்நிலை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவமானது தம்மை மிரட்டும் வகையில் படையினரால் செய்யப்பட்ட செயல் எனக் கூறி கண்காணிப்புக் குழுவிடம் இப்பகுதி இளைஞர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். (33)


வாழ்த்துகின்றோம்



நீண்ட காலம் அதிபர் பணியினை சிறப்பாக ஆற்றி இன்று (25.11.2003) கரைதுறைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெறுகின்ற திரு.நாகமணி-தியாகராஜா அவர்களை மனதார வாழ்த்துகின்றோம். (3493)

நண்பர்கள்,
புதுக்குடியிருப்பு பிரதேசம்.



நவம்பர் 27 முல்லை நகரில் மாவீரர் பெருவிழா




முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள்,
முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், வர்த்தக சங்கம்,
ப.தெ.வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்,
பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், விளையாட்டுக் கழகங்கள், முல்லை நகர் புனரமைப்புக்குழு, தேசிய எழுச்சிப்பேரவை.

ஆகிய பொது அமைப்புக்களுடன் இணைந்து கடற்புலிகள் எடுக்கும் பெருவிழா

இடம்:- முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானம்.

நிகழ்ச்சி நிரல்

காலை - நிகழ்வு - 8.00மணிக்கு

பொதுச்சுடர் ஏற்றல்
தேசியக்கொடி ஏற்றல்
ஈகச்சுடர் ஏற்றல்
மலர் வணக்கம்

மாலை நிகழ்வுகள் - மாலை 6.30 மணிக்கு

முக்கிய பிரமுகர்களின் சிறப்புரைகள்
பிரதேச வாழ் மக்களின் கலைநிகழ்வுகள்
மகளிர் கலைபண்பாட்டுக் கழகத்தின்
கலை நிகழ்வுகள்
விசேட நிகழ்வாக - வவுனியா
இசைக்குழுவினர் வழங்கும் "இசை கானங்கள்"

26.11.2003.
காலை நிகழ்வுகள் - 8.00 மணிக்கு

பொதுச்சுடரேற்றல்,
தேசியக்கொடியேற்றல்,
ஈகச்சுடரேற்றல்,
மலர் வணக்கம்.

மாலை நிகழ்வுகள் - 6.30 மணிக்கு

முக்கிய பிரமுகர்கள் சிறப்புரை
பிரதேச வாழ் மக்களின் கலைநிகழ்வுகள்
கடற்புலி மகளிர் வழங்கும் "ஏன் இந்த மௌனம்"
நாட்டிய நாடகம்

விசேட நிகழ்வாக மன்னார் இசைக்குழுவினர்
வழங்கும் "இன்னிசைக்கானங்கள்".

27.11.2003. - மாலை நிகழ்வுகள் - 4.00மணிக்கு

தரையில்:-

கடற்புலிகளின் விசேட படையணிகளின் அணிவகுப்பு இடம்பெறும்.

கடலில் - மாலை 5.00மணிக்கு

விடுதலைப்புலிகளின் கடற்படை சிறப்பு அணியினரின் கடற்கலங்களின் அணிவகுப்பு இடம் பெறும். அதனைத் தொடர்ந்து தேசியத்தலைவரின் மாவீரர் தின உரை இடம் பெறும் பின்னர் கடலிலேவிசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் பொதுச் சுடர் ஏற்றல் நிகழ்வு இடம் பெறும்.முல்லை நகரில் மாவீரர் நினைவாக கப்பல் வடிவில் அமைக்கப்பட்ட ஒலி,ஒளிஊட்டப்பட்டு முல்லை கடல் நீரேரியில் விடப்படும். இத்துடன் மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட தாக்குதல் வடிவங்கள், ஒளிக்கோபுரங்கள் விசேட வளைவுகள், எழுச்சிக் கொடிகள்,மாவீரர்களின் படங்கள் தாங்கிய விசேட நினைவு மண்டபம் என்பன ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இவ்வண்ணம்

முல்லை/ கடற்றொழிலாளர்
கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்.

(3895)



**சிந்தனைக்கு**

சமூக விடுதலை என்ற எமது குறிக்கோளில் பெண் விடுதலை பிரதான இடத்தை வகிக்கிறது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 25-11-2003

# பொய்களும் - அதிகாரங்களும்

"நாட்டின் பாதுகாப்புக் கருதி அண்மையில் நான் எனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தினேன். இதன் மூலம் சமாதானமோ அன்றி வேறெந்தத்துறையோ பாதிக்கப்படவில்லை. அப்படிப் பாதிக்கப்பட்டதாகக் கூறுவதெல்லாம் பச்சைப் பொய் இதுவரை எனது அதிகாரத்தில் 25சதவீதத்தையே பாவித்துள்ளேன் இன்னமும் 75சதவீதத்தை பயன்படுத்தவில்லை" என்ற சனாதிபதி சந்திரிகாவின் கூற்றுக்கள் இலங்கையின் எதிர்காலம் குறித்துப் பல கேள்விகளை எழுப்புவதாக அமைகின்றது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை ஐ.தே.முன்னணி அரசாங்கத்திடம் இருந்து பறித்ததினால் நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி பல விடயங்களைப் பாதிப்பிற்கும், நெருக்கடிக்கும் உள்ளாக்கியுள்ளது என்பதற்கு நிராகரிக்க முடியாத ஆதாரங்கள் உண்டு. இதில் முதலாவதாக இனப்பிரச்சினைக் கான சமாதான முயற்சிகள் கேள்விக்குள்ளாகியுள்ளதைச் சுட்டிக்காட்ட முடியும். ஏனெனில் தற்பொழுது சமாதான முயற்சி கள் யாவும் கிடப்பில் போடப்பட்டதொரு நிலையே காணப்படுகின்றது.

குறிப்பாகச் சுட்டிக்காட்டுவதானால்,விடுதலைப்புலிகளுக்கும் ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கும் இடையில் விரைவில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் குறித்து தற்பொழுது எதுவுமே கூற முடியாத நிலை காணப்படுகின்றது. குறைந்த பட்சம் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமா? என்ற ஐயம் எழும் அளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

இதற்கு, அரச தரப்பில் இருந்து இன்று யார் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது என்ற கேள்வி முக்கியமானதாகியுள்ளது. மறுவளமாகப் பார்த்தால் புலிகள் யாருடன் பேசுவது என்பதே தீர்மானிக்கப்பட முடியாததாகியுள்ளது. பேச்சுவார்த்தைகளை முன்னின்று நடாத்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பறிக்கப்பட்ட அமைச்சுக்கள் தங்களிடம் ஒப்படைக்கப்படாது விட்டால் தம்மால் பேச்சுக்களை நடத்த முடியாது எனத் தெரிவித்துவிட்டார்.

சனாதிபதி சந்திரிகாவோ ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க தமது ஒத்துழைப்பு உண்டு எனத் தெரிவித்து வரினும் பிரதமர் ரணில் மறுக்கும் பட்சத்தில்-மறுத்துவிட்டார்-பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது குறித்து நேரடியானதும் உறுதியானதுமான பதில் கூறாது. அரசியல் தீர்வு முயற்சிகள் கைவிடப்படமாட்டாது என்று மட்டும் கூறிவருகின்றார்.

இதே வேளை சமாதான முயற்சிகளில் ஏற்பாட்டாளர்களாகப் பங்குபற்றிய நோர்வே அரசு தமது பணியை இடைநிறுத்திக் கொண்டுள்ளது. பிரதமர் ரணிலுக்கும் சனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையிலான அதிகாரப் போட்டியும் சமாதான முயற்சிகளில் சனாதிபதி சந்திரிகா காட்டிவரும் அக்கறையீனமும் நோர்வே அரசு ஏற்பாட்டாளர் என்ற நிலையில் இருந்து தற்காலிகமாகவேனும் விலகிக்கொள்ள வேண்டிய நிலை உருவாக்கி இருந்தது.

இந்த வகையில் சமாதான முயற்சிகள் இடைநிறுத்தப்பட்டும் அதன் எதிர்காலம் குறித்து கேள்வியும் எழுந்துள்ள நிலையிலும் சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகள் பாதிப்புற வில்லை எனவும் அவ்வாறு தெரிவிப்பது சுத்தப் பொய் எனவும் கூறுவது அயோக்கியத்தனமானது. உலகில் உள்ள அனைவரையும் முட்டாள்கள் ஆக்குவது போன்றது.


அத்தோடு சனாதிபதி சந்திரிகாவின் சமாதான முயற்சிகள் மட்டுமல்ல, வேறு எந்தத் துறையுமே பாதிக்கப்படவில்லை எனக் கூறுவது அவரின் பித்தலாட்டத்தையே வெளிப்படுத்துவதாயுள்ளது. சமாதான முயற்சிகளில் தோன்றியுள்ள முட்டுக்கட்டை இலங்கையின் அனைத்துத் துறைகளையும் பாதித்திருப்பினும் உடனடியாகவும், தீவிரமாகவும் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளமை குறித்து தகவல்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. எடுத்துக் காட்டாகப் பங்குச் சந்தையில் வீழ்ச்சி, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தயக்கம், உல்லாசப் பயணத்துறையில் வீழ்ச்சி என்பன உடனடியாக உணரப்பட்டவையாகியுள்ளன.

இந்த வகையில் அமைச்சரவைப் பறிப்பானது பொருளாதாரத்தை இரவோடு இரவாக நேரடியாகவே பாதிப்புக்குள்ளாக்கியுள்ள நிலையில், தமது நடவடிக்கைகளால் எத்துறையும் பாதிப்பிற்குள்ளாகவில்லை எனக் கூறுவது அவர் உண்மைகள் பேசுவதைத் தவிர்த்துக் கொள்வதென விரதம் பூண்டுள்ளாரோ எனச் சந்தேகிக்க வைக்கின்றது.

ஆனால், சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளது போன்று நிறைவேற்று அதிகாரத்தில் 25 சதவீதத்தையே பயன்படுத்தியுள்ளேன் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதே. ஏனெனில், அவரிடம் உள்ள நிறைவேற்று அதிகாரத்தின் மூலம், மூன்று அமைச்சுக்களை மட்டுமல்ல, அனைத்து அமைச்சுக்களையும் பறிக்கவும் முடியும். அரசாங்கத்தையே கவிழ்க்கவும் முடியும்.

இந்த வகையில், சனாதிபதி சந்திரிகா கூறும் பொய்களும், அவரிடம் உள்ள அதிகாரங்களும் இலங்கைக்கு சமாதானத்தையோ, நிம்மதியான எதிர்காலத்தையோ கொடுத்துவிடப் போவதில்லை. மாறாக, அழிவையும், நிம்மதியின்மையுமே கொடுக்கக் கூடியதாகும். அதாவது, இலங்கையின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு சந்திரிகாவும் அவரிடமுள்ள நிறைவேற்று அதிகாரமும் எதிரானவையாக உள்ளன. இந்நிலை நீடிப்பின் எதிர்காலத்தில் சிறிலங்கா பெரும் துயரங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே!




# தேசியத் தலைவரின் சிந்தனைகளுக்கமைய அயராது உழைத்தவர் அப்பையா அண்ணர்!

## நினைவுக்கல் நாட்டும் நிகழ்வில் வெ.இளங்குமரன்

தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைகளுக்கமைவாகதேசத்தின் விடுதலைக்காக அயராது உழைத்தவர்தான் மூத்த உறுப்பினர் லெப். கேணல் அப்பையா அண்ணர் என நேற்று முன்தினம் விசுவமடுவில் நடைபெற்ற மாவீரர் அப்பையா அண்ணரின் நினைவுக் கல் திரை நீக்க நிகழ்வில் கலந்து வீரவணக்க உரையாற்றுகையில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அப்பையா அண்ணர் எமது விடுதலை இயக்கத்தில் ஆரம்ப காலத்தில் இருந்து தொடர்ச்சியாக இருபது ஆண்டுகள் இந்த மண்ணின் விடுதலைக்காகப் போராடியவர் இந்த விடுதலைப் போராட்டம் இளைஞர்களுக்கு மட்டும் அல்ல, அனைவருக்கும் உரிய ஒன்று என்பதை எடுத்துக்காட்டும் வகையில் செயற்பட்டவர்.

கவிஞர் காசி அண்ணனினுடைய அறிமுகத்துடன் 1978ஆம் ஆண்டில் எமது விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட அப்பையா அண்ணர் தலைவருக்கு மிகவும் நம்பிக்கை யுடையவராக செயற்பட்டதுடன் எமது இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பெரும்பங்காற்றியிருந்தார்.

காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வந்த தமிழினம் ஆயுதம் ஏந்திப் போராடுவதன் மூலம் தான் தனக்கான உரிமையை வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை வைத்திருந்தவர். இவர் போராட்டத்திற்கு இணைவதற்கு முன்னதாகவே தேசத் துரோக செயல்களில் ஈடுபடுவோர்களை தாக்கி அழிக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்டு அப்போது இயங்கி வந்த பல்வேறு ஆயுதக் குழுக்களுக்கு அவர்களை அழிக்க ஒத்துழைப்பு வழங்கி செயற் பட்டார்.ஆனாலும் அவர்கள் அப்பையா அண்ணரின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யவில்லை.

இதனால் விரக்தி அடைந்த இவர் நூலகங்களில் எல்லாம் சென்று அங்கு வெடிபொருட்கள் தொடர்பாக எழுதப்பட்ட நூல்களை கற்று துரோகிகளை அழிக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற போது தான் எமது தலைவரின் வழிநடத்தலில் இயங்குகின்ற விடுதலைப் புலிகளின் அமைப்பின் செயற்பாடுகளில் விருப்பம் கொண்டு அதில் தானும் இணைந்து கொண்டார்.

அப்பையா அண்ணனை வைத்தே எமது விடுதலை இயக்கத்தின் படைக்கல உருவாக்கத்தை மேற்கொண்டோம். அப்பையா அண்ணை வயது கூடியவர் என்றாலும் விடுதலைக் கான செயற்பாடுகளில் மிகவும் உறுதியாகவும் சுறுசுறுப்பாகவும்அவர் செயற்பட்டார். ஆரம்ப காலங் களில் தாக்குதல் தளபதியாக இருந்த சாள்ஸ் அன்ரனியின் கீழ் நடைபெற்ற பெருமளவான தாக்கு தல்களில் அப்பையா அண்ணன் பங்கு கொண்டு சிறப்பாக செயற்பட்டார்.

எமது விடுதலைப் போராட்டத் திருப்பெரும் வெற்றியையும் பலத்தையும் சேர்த்துத் தந்த திருநெல்வேலி கண்ணி வெடித்தாக்குதலில் பதின்மூன்று இராணுவம் கொல்லப்பட்டு அவர்கள் பயணித்த வாகனம் பல அடிகளுக்கு மேலாக தூக்கி வீசப்பட்ட அத்தாக்குதலுக்கான வெடிபொருளை அப்பையா அண்ணனே உருவாக்கியிருந்தார். இது போன்ற பல தாக்குதல்களில் அவர் நேரடியாகக் கலந்து கொண்டிருந்தார்.

83ஆம் ஆண்டு சாவகச்சேரி பொலிஸ நிலையத் தாக்குதலுக் கான தயார்ப்படுத்தலில் இவர் மிகவும் திறமையாகச் செயற்பட்டார்.

அப்பையா அண்ணர் இயக்கத்தின் தாக்குதல் நடவடிக்கைகள் விரிவடைந்து செல்லச் செல்ல அதற்கேற்ற வகையில் இவரது பங்களிப்பு, தாக்குதல் நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமானதாக இருந்தது.83,84ஆம் ஆண்டுகளில் எமது தாக்குதல்கள் மிகக் கடுமையானதாக இருந்தது.84ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தை முகாமிற்குள் முடக்கி அப்பகுதிகளை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த அந்தத் தாக்குதல்களில் அப்பையா அண்ணனின் பங்கு முக்கியமானதாக இருந்தது.



"அவரின் தாக்குதல் வரலாற்றைக் கூறுவதாக இருந்தால் எமது போராட்ட வரலாற்றை முற்றுமுழுதாகவே கூறி விடவேண்டும். இந்திய இராணுவம் எமது மண்ணில் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் அப்பையா அண்ணனைப் பிடித்து விட்டால்எமது ஆயுத உற்பத்தியை முடக்கிவிடலாம் என்று கருதும் நிலையில் இந்திய இராணுவம் இவரைக் கடுமையாகத் தேடியது. அவ்வளவிற்கு இவரின் பணி முக்கியமானதாக அமைந்திருந்தது.

எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினர் இன்று மூத்த மாவீரராக மாறிவிட்டார் என அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

# மேலுமொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசாங்கம் செய்யப் போகிறது

## அமைச்சர் ராஜித சேனாரட்ண

அரசாங்கம் மேலும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட விருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். ஏற்கனவே அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளது. இதன் மூலமே இன்று நாட்டில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் சனாதிபதியுடன் அரசாங்கம் ஒத்துழைப்பு அரசாங்க நிர்வாகம் தொடர்பில் ஒப்பந்தம் செய்து கொள்ளவிருந்தது.

இதன் மூலம் தேசிய அரசாங்கம் ஒன்று குறித்து ஐக்கியதேசியக் கட்சியும், பொதுசனமுன்னணியும் இணக்கம் ஒன்றுக்கு வரப்போவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"அரசாங்கத்தை காத்து நாட்டைப் பாதுகாப்போம்" என்ற தொனிப் பொருளில் ஐக்கிய தேசியக் கட்சி 16 மாவட்டங்களில் சனிக்கிழமை முதல் பிரச்சாரக் கூட்டங்களை நடத்திவருகிறது. இதில் ஒரு கூட்டம் நேற்று முன்தினம் அம்பலாங்கொடையில் இடம்பெற்றபோதே அமைச்சர் இந்தத் தகவல்களை வெளிப்படுத்தினார். (32)

## மீண்டும் பரிந்துரை

இலங்கையின் பொலிஸ்மா அதிபராக பதில் காவல்துறை அதிபர் இந்திரா டி சில்வாவை நியமிக்குமாறு சனாதிபதி இரண்டாவது முறையும் அரசியல் அமைப்பு நிர்ணய சபைக்குப் பரிந்துரைத்துள்ளார். ஏற்கனவே இந்திரா டி சில்வாவை சனாதிபதி பரிந்துரைத்தபோதும் அதனை அரசியல் அமைப்பு நிர்ணய சபை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையில் சனாதிபதியின் புதிய பரிந்துரை தொடர்பில் ஆராய எதிர்வரும் வியாழக்கிழமை அரசியல்நிர்ணய சபை கூடவிருக்கிறது.(32)

# கரும்புலி லெப்.கேணல் போர்க் மிகவும் உறுதியானதொரு தளபதி

## -மாங்குளம் வெற்றிவிழா நிகழ்வில் தளபதி பால்ராஜ் புகழாரம்

(அலுவலக செய்தியாளர்)

எமது மண்ணை ஆக்கிரமித்திருந்த மாங்குளம் சிறிலங்காப் படை முகாமை நாம் மிகவும் வெற்றிகரமாகத் தாக்கி அழிப்பதற்கு கரும்புலி லெப் கேணல் போர்க்கின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். என நேற்று முன்தினம் மாங்குளத்தில் நடைபெற்ற கரும்புலி போர்க் அவர்களின் உருவச்சிலைத் திறப்பு மாங்குளம் படை முகாம் வெற்றி கொள்ளப்பட்டதன் பதின்மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து சிறப்புரை ஆற்றுகையில் தளபதி கேணல் பால்ராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கரும்புலி போர்க் மிகவும் உறுதியான ஒரு தளபதி எந்நேரமும் எதிரி மீது தாக்குதல் நடத்துவது பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பார். இந்தத் தளபதிக்கு சலிப்பென்பது என்னவென்றே தெரியாது.

எதிரி எங்கிருக்கிறான் என்பதைத்தேடிப்பிடித்து அதற்கேற்ப திட்டங்களை வகுத்துத் தினமும் பல தாக்குதல்களை மேற்கொண்டு எதிரியிடமிருந்து ஆயுதத் தளபாடங்களைக் கைப்பற்றி எமது விடுதலைப் போருக்கு வலுச்சேர்த்தவர் தான் இந்தத் தளபதி. வன்னி மண்ணில் போர்க்கின் கால் பதியாத இடம் இல்லை என்றுதான் கூறவேண்டும். போர்க் மிகவும் திறமையானவன் நம்பிக்கைக்குரிய ஒரு சிறந்த தளபதி.

எத்தகைய இறுக்கமான களங்களிலும் மிகவும் திறமையாகக் களமாடி வென்றுவரும் போர்க்கை நாம் இன்று இழந்து போனோம். எந்தப் பொறுப்புக்களை வழங்கினாலும் அவற்றில் சாதனை படைக்கும் அளவுக்குப் பொறுப்புணர்வுடன் செய்து முடிப்பார்.

போர்க் ஒரு வித்தியாசமான தளபதி இவரின் இராணுவரீதியான செயற்பாடுகள் மிகவும் பெறுமதியானவை விடுதலை மீதும் தலைவர் மீதும் மண்ணின் மீதும் மக்கள் மீதும் அவன் கொண்டிருந்த விசுவாசம் அவனைக் கரும புலியாக்கியது. விடுதலைப் போரின பல கால கட்டங்களைச் சந்தித்தவன் இந்த மண்ணின் விடுதலைக்காக கரும்புலியாகச் சென்று வீரகாவியமாகிவிட்டான் போர்க் என அவர் மேலும் தெரிவித்தார். (லோ)



லெப். கேணல் போர்க்கின் சிலைக்கு அவரின் தாயார் மலர் மாலை அணிவிக்கின்றார்.

# மாவீரர்களின் பெற்றோர்கள் வலய ரீதியாகக் கௌரவிப்பு

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

உடையார்கட்டு-வள்ளிபுனம் ஆகிய வலயங்களின் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு விழா நிகழ்வு நேற்று உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் தலைமை வகிப்பில் இடம்பெற்றது.

வரவேற்புரையை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் நிகழ்த்தியதை அடுத்து சிறப்புரையை தமிழீழ ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் அன்பரசன் வழங்கினார்.

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் நினைவுக் கருத்துரை நிகழ்த்தினார். தென்மராட்சி மற்றும் தீவகப் பகுதிகளைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் அவ்வப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற தீவகத்தில் சுருவில் துறையூர் ஆகிய சனசமூக நிலையங்களிலும், தென்மராட்சியில் மட்டுவில் - வளர்மதி சனசமூக நிலையம், கைதடியில் குருசாமி வித்தியாலயம், கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றில் அவ்வப் பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இக் கௌரவிப்பு நிகழ்வுகளில் மொத்தமாக 256 மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டுள்ளதுடன் இந்நிகழ்வுகளில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைமுக்கியஸ்தர்கள் கலந்து கொண்டும் உரையாற்றியுள்ளனர்.

வடமராட்சிக் கிழக்கில் இன்று 500மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு காலை 11.00மணிக்கு யா/உடுத்துறை மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. மாலை 4.00 மணிக்கு உடுத்துறை மகா வித்தியாலயத்தில் தீபன் விளையாட்டு மைதானத்தில் பொதுக் கூட்டமும் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (19.33.11)

### திருமலையில்...

முகமது சாகீர் சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே பலியாகியுள்ளார். மற்றுமொருவர் திருகோணமலை அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இக்குண்டு வீச்சுச் சம்பவம் தொடர்பாக கிண்ணியாப் பொலிசார் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இக்குண்டு வீச்சினை யார் மேற்கொண்டார்கள் என்ற தகவல்கள் எவையும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இதேவேளை, கிண்ணியா பைசால் நகர்ப் பகுதியிலும் நேற்று இரவு கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது. இதன் விளைவாக அனுசாமன்சூர் என்ற 28 வயதான நபர் பலியாகியுள்ளார். மேலும் இருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இக்குண்டு வீச்சுச் சம்பவம் தொடர்பாகவும் பொலிசார் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய சம்பவங்களையடுத்து கிண்ணியாவையும் அதனையடுத்துள்ள பகுதிகளிலும் பொலிசார் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுதந்திரக்..

துரையாடலின்போது ஜே.வி.பி.யின். செயலாளர் டில்வின் சில்வா மேலும் தெரிவிக்கையில், தேசிய அரசாங்கக் கோட்பாடு இந்தக் கூட்டணி அமைப்பதற்கான முயற்சியை தளர்வடையச்செய்கிறது. கடந்த ஆவணி மாதத்தில் கூட்டணி சம்பந்தமான பேச்சுக்கள் தற்காலிகமாக தடைப்பட்டபோதும் ஐ.தே.கட்சியை தோற்கடிப்பதற்கான உத்வேகம் வலுவடைந்தது. கூட்டணி அமைப்பதில் ஜே.வி.பி.விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கைக் கடைப்பிடிக்கும். நாட்டின் அபிவிருத்திக்கு உதவுமாயின் தேசிய அரசாங்கக் கோட்பாட்டை எமது கட்சி எதிர்க்க மாட்டாது. ஆயினும் விரும்பத்தகாத விளைவுகளை இது ஏற்படுத்தும், என்று காணப்படின் ஜே.வி.பி. தேசாபிமானம் கொண்ட மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதற்கு தனித்துச் செயற்படும் என்றும் டில்வின்சில்வா கூறினார்.

## இரு மாத சிறை

மதுபோதையில் வேகமாக வாகனத்தைச் செலுத்திய பொதுமகன் ஒருவருக்கு இரண்டு மாத சிறைத்தண்டனையை பருத்தித்துறை நீதவான் விதித்துள்ளார்.

நெல்லியடிப் பொலிஸாரால் பிடிக்கப்பட்ட அல்வாய் மேற்குப் பகுதியைச் சேர்ந்த தவராசாசந்திரலிங்கம் எனும் குறித்த நபரே நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த பொதுமகன் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இரண்டு மாத சிறைத் தண்டனை விதித்து பருத்தித்துறை நீதவான் தீர்ப்பளித்துள்ளார். (27)

### தமிழீழ...

ணங்கள், பள்ளிகள், இயக்கப் பணிமனைகள் தளங்களில் தேசியக் கொடியேற்றப்பட்டு எழுச்சி நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

பொதுச்சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல், மாவீரர் திருவுருவப் படங்களுக்கு ஈகச்சுடரேற்றல், மலர் வணக்கம், அகவணக்கம், உறுதியுரை எடுத்தல், நினைவுரை என்ற ஒழுங்கில் நிகழ்வுகள் நடைபெறும்.

### மழையிருட்டில்..

தவறி இராணுவ முகாம் வேலியுடன் இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் அசம்பாவிதத்தையடுத்தே படையினரால் கைது செயயப்பட்டிருந்த இவர்கள் இருவரும் நேற்றுவரை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

இதேவேளை இவர்களது விடுதலை தொடர்பாக அவ் இளைஞர்களது பெற்றோர் படை முகாமுடன் தொடர்பு கொண்டிருந்த போதும், அவர்களை விடுவிப்பது தொடர்பாகப் படைத்தரப்பு தகவல எதையும் வெளியிட்டிருக்கவில்லை எனவும் கூறப்படுகின்றது. (27)

# கிளி. பொன்னம்பலம் மருத்துவமனையில் நாளை இலவச கண்சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் அமைந்துள்ள வைத்திய கலாநிதி பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் இலவச கண்சிகிச்சை இடம்பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் நாளை மேற்படி மருத்துவமனையில் இலவச கண்பரிசோதனை இடம் பெற உள்ளது.

லண்டனில் இருந்து வருகை தந்து வவுனியா பொதுவைத்தியசாலையில் தற்போது கடமை புரிகின்ற கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ரூபசிங்கம் அவர்கள் கண்பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளார்.

சிகிச்சையில் பயன்பெறவிரும்புவர்கள் முன்கூட்டியே மேற்படி கிளிநொச்சி மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவில் பதிவுகளை மேற்கொள்ளும் வண்ணம் வைத்தியசாலை நிர்வாகத்தினர் வேண்டுகை விடுத்துள்ளனர்.

மேற்படி கண்சத்திர சிகிச்சை கண்பரிசோதனையும் மாதாந்தம் 3ம் 4ம் புதன்கிழமைகளில் இவ் வைத்தியசாலைகளில் இடம் பெறும் எனவும் தெரிவித்துள்ளனர். (சோ)

## சனாதிபதி, சபாநாயகர் குறித்து

# சனவரி மாதம் வரை பாராளு.வில் விவாதிப்பதில்லை என முடிவு

சனாதிபதி பொறுப்பேற்றுள்ள மூன்று அமைச்சுக்கள் மற்றும் சனாதிபதியின் நாடாளுமன்ற அமர்வு குறித்த சபாநாயகரின் விமர்சனம் என்பன தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிர்வரும் சனவரி மாதம் வரை விவாதிப்பதில்லை எனக் கட்சி தலைவர்களின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஒத்துழைப்பு இணக்கம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருப்பதால் அதற்கு ஆதரவு வழங்கும் வகையில் இம்முடிவு நேற்று எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சனாதிபதிக்கும் - பிரதமருக்கும் இடையில் நடைபெற்று வருகின்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தேசிய ஒத்துழைப்பு அரசாங்கத்துக்கென புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்படும் என அமைச்சர் ராஜித சேனாரட்ண நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### யாழ்...

தாக்கியுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளுக்காக நேற்று அம்மாணவர்களைச்சந்தித்து விசாரணைகள் நடத்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் பொலிசாரின் மேற்படி செயற்பாடானது தம் மனித உரிமைகளை மீறும் செயல் எனவும் சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடிக்க வேண்டிய பொலிசாரே திருடர்கள் போல் சீருடைகள், இலக்கங்கள் மற்றும் நீதிமன்ற கட்டளைகள் இன்றி கட்டடத்துள் அத்து மீறிநுழைந்தமையும் ஒருகாடைத்தனமான செயல் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளதுடன் யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் கெட்டர் தர்மசிறியும் இதில் கலந்திருந்தார் எனவும் குற்றம் சாட்டியுள்ளனர். (33)


## வாழ்த்துகின்றோம்



கிளிநொச்சி பிள்ளையார் வாணிபம் உரிமையாளர்

பொன்னம்பலம் விசுவலிங்கம்

அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் பெற்றதையிட்டு வாழ்த்துகின்றோம்

(3354)

சிவா வர்த்தக நிலையம்
23, கண்டி வீதி,
கிளிநொச்சி.



## காணவில்லை

மனநோய் உள்ள இளம் பெண் ஒருவர் தவறி விட்டார். அவர் வீதி ஓரங்களில் நின்றால் காண்பவர்கள் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தில் தொடர்பு கொண்டு எமக்கு அறியத் தரும் வண்ணம் மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம்.

(3351)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.